# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 61/2021** **Date:17.11.2025**

**(PW2)- ஐயப்பன்**

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் எங்கிருந்து வருகிறேன் என்றால் திருநெல்வேலியிலிருந்து வருகிறேன்.மேற்படி ஊருக்கு சென்று எத்தனை வருடம் இருக்கும் என்றால் 30 வருடங்களாகிறது. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தனியார் போக்குவரத்து நிறுவனத்தில் வேலை செய்கிறேன். நான் 30 வருடத்திற்கு முன்பு நான் கன்னியாகுமரி மாவட்டத்தில் குடியிருந்த வீட்டின் எண் என்ன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி தாவா சொத்தை வீடாக கிரயம் பெற்றாரா அல்லது நிலமாக கிரயம் பெற்றாரா என்றால் நிலமாக தான் கிரயம் பெற்றார். 2021 ம் வருடம் வீடு கட்டினார் என்றால் சரிதான்.

2. அறக்கட்டளை சார்பாக சாட்சியமளிக்க வந்துள்ளேனா அல்லது எனது சகோதரரான வாதிக்கு சாட்சியமளிக்க வந்துள்ளேனா அறக்கட்டளை சார்பாக சாட்சியமளிக்க வந்துள்ளேன். அறக்கட்டளையில் ஒரு வழக்கு வந்தால் கூட்டம் கூட்டப்பட்டு தீர்மானம் இயற்றப்பட்டு அதனடிப்படையில் ஒருவரை சாட்சியமளிக்க அனுமதிப்பார்கள் என்றாலும் அதனடிப்படையில் நானும் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் அறக்கட்டளையை தரப்பினராக சேர்க்கப்படவில்லையென்றால் சரியல்ல.

3. அறக்கட்டளையில் என்னை சாட்சியமளிக்க இயற்றப்பட்ட தீர்மானத்தை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அவ்வாறு எந்த தீர்மானமும் இயற்றப்படவில்லை. என்னை இந்த வழக்கு சம்பந்தமாக சாட்சியமளிக்க அறக்கட்டளை என்னை அணுகவில்லையென்றாலும் நான் அறக்கட்டளைக்கு வேண்டி சாட்சியளிக்க வரவில்லையென்றாலும் சாட்சி பதிலளிக்காமல் அமைதியாக உள்ளார். அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்ட 3 ½ சென்ட் இடம் தாவா பட்டிகை சொத்தில் உள்ளது என்றால் சரிதான்.

4. நான் குறிப்பிட்டுள்ள கோவில் கொடை எந்த மாதத்தில் நடைபெறும் என்றால் பங்குனி மாதம் நடைபெறும். மேற்படி கோவில் கொடைக்கு கடைசியாக எப்போது

சென்றேன் என்றால் 2 முதல் 4 வருடங்களுக்கு முன்னால் சென்றிருப்பேன். தாவா பாதை எத்தனை அடி என்றால் நீளமும் அகலமும் 10 அடிக்கு மேல் இருக்கும். மேற்படி பாதையில் வாதி எத்தனை அடி ஆக்கிரமித்துள்ளதாக நான் குறிப்பிடுகிறேன் என்றால் 5 அடி ஆக்கிரமித்துள்ளார். நான் குறிப்பிடுவது போல் மேற்படி பாதையில் வாதி ஆக்கிரமித்து சன்சைட் கட்டியதால் மக்களும் நடமாட முடியவில்லையென்றால் சரிதான்.

5. பிரதிவாதியின் வீட்டிற்கு எதிரே ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான், அது புஷ்பா என்ற வள்ளியின் வீடு ஆகும். அவர்களது வீட்டில் உள்ள சன்சைட் 1 அடி அகலம் பாதையை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டின் சன்சைட் வாதியின் நான்கு சக்கர வாகனத்தை விட எவ்வளவு உயரமாக உள்ளது என்றால் தரையிலிருந்து 7 அடி உயரமாக உள்ளது . மேற்படி பாதையை பொதுவாக யாரால் விடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாட்டு வண்டியின் அகலம் எவ்வளவு என்றால் 4 அடி இருக்கும்.

6. தற்போது 4 அடி பாதையும் அங்கு இல்லையென்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டிற்கு முன்பு உள்ள வீடு யாருடைய வீடு என்றால் தாணு பிள்ளை என்ற ஒரு ஆசிரியரின் வீடாகும். மேற்படி தாணு பிள்ளையின் வீட்டின் சுவரின் எல்கை கோட்டை தாண்டி பிரதிவாதியின் வீட்டின் படிக்கட்டுகள் அமைக்கப்படவில்லையென்றால் சரிதான். மேற்படி பாதை வாய்மொழியாக கொடுக்கப்பட்ட அனுமதியின் அடிப்படையில் எங்களால் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல.

7. வாதி முறையான அனுமதி பெற்று தான் வீடு கட்டி வருகிறார் என்றால் சரிதான். வாதியின் வீட்டிற்கு முன்பு உள்ள பாதை எவ்வளவு அகலம் இருக்கும் என்றால் சுமார் 15 முதல் 20 அடி இருக்கும். மேற்படிவாதியின் வீட்டிற்கு பின்பு தாவா இடம் அமைந்துள்ளது என்றால் சரிதான். தாவா இடத்திற்கு கிழக்கு பக்கம் தெரு செல்கிறது என்றால் சரியல்ல, தெற்கு பகுதியில் 15 அடி பாதை உள்ளது. மேற்படி 15 அடி பாதை வழியாக தாவா இடத்திற்கு செல்லலாம் என்றால் செல்ல முடியாது.

8. காம்பவுண்ட்சுவர் 30 அடி உயரத்தில் தெற்கு பக்கம் கட்டப்பட்டுள்ளதா என்றால் சரிதான், 30 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளது. நான் குறிப்பிடும் கோவிலில் கொடை நடந்ததை காட்டக்கூடிய எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் எந்த புகைப்படமும் 2021 ற்கு முன்பு எடுக்கப்படவில்லை.

வாதியின் வீட்டிற்கு முன்பு கார் செல்லக்கூடிய அளவு அகலமான பாதை உள்ளது என்றால் உள்ளது. வண்டி செல்வதற்கு எத்தனை அடி பாதை தேவைப்படும் என்றால் 15 முதல் 20 அடி பாதை தேவைப்படும் . இதற்கு முன்பு பாதை எவ்வளவு அகலம் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அளவு தெரியாது, ஆனால் கனரக வாகனங்கள் சென்று வரும்.

9. நான் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள பாதையின் அகலம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் தாவா பின்பு நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்த பின்பு தெரிய வந்தது. மேற்படி பாதையின் தன்மை என்ன என்றால் அது ஒரு மண் பாதையாகும். நான் அறக்கட்டளையில் இருப்பதை காட்டக்கூடிய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் தாக்கல் செய்யவில்லை. வாதியின் சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 5.7 சென்டாகும். B பட்டிகை சொத்தின் பாதை பொது பாதை என்பதை காட்ட ஏதேனும் ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் அது பற்றி தெரியாது.

10. எத்தனை வருடமாக கார் வர முடியாமல் கோவில் கொடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றால் பங்குனி 2021 முதல் நடத்தவில்லை. அதற்கு முன்பு நடந்த கொடைகளுக்கான வரவு செலவுவிவரங்கள் அறக்கட்டளை புத்தகத்தில் பதிவு செய்து வைத்திருப்பார்கள் என்றால் சரிதான். மேற்படி செலவு விவரங்கள் பற்றிய அறக்கட்டளை புத்தகத்தை நான் நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். தாவா இடத்தை இதற்கு முன்பும் தற்போதும் பார்வையிடவில்லையென்றாலும் அதனால் தான் எனது நிரூபண வாக்குமூலத்தில் தவறான அளவுகளை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி எனது உறவினர் என்றாலும் அவருக்காக வேண்டி பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, கோவிலுக்கு பாதை வேண்டி சாட்சியமளிக்கிறேன்.

11.கோவிலுக்கு செல்ல பாதை வேண்டி அறக்கட்டளை சார்பில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றால் இந்த வழக்கு நிலுவையில் உள்ளதால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. என்னை தவிர அதே ஊரில் அறக்கட்டளை சார்ந்த நபர்கள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்களை சாட்சியமளிக்க அழைக்காமல் என்னை திருநெல்வேலியிலிருந்து எதற்காக சாட்சியமளிக்க அழைத்து வந்துள்ளார்கள் என்றால் அவர்கள் யாரும் சாட்சியமளிக்க முன் வரவில்லை, அதனால் தான் நான் சாட்சியமளிக்க வந்துள்ளேன். பிரதிவாதியின் வீட்றடிக்கு எதிர்புறம் உள்ள

நபர் அறக்கட்டளையில் உள்ள நபர் என்பதால் அவர் ஆக்கிரம் செய்துள்ளதை பற்றி நானோ மற்றவர்களோ ஆட்சேபணை செய்யவில்லையென்றால் சரியல்ல. நான் குறிப்பிடும் பாதை பிரதிவாதியின் வீட்டின் எதிர்புறம் உள்ள நபரால் ஆக்கிரம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்